தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்,இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள்ளே தொடர்புடைய சட்ட திட்டங்களிற்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியுள்ளா என்பதும்,

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தின் கீழ் கணப்பட்ட இலங்கை கண் வங்கி தனி நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டமையின் காரணத்தினால் அதற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் கணக்கீட்டு குறிப்புக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	13 ஆம் அட்டவணை ஊடாக காண்பிக்கப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 இன் 47 பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப் பகுதிக்கான வழுக்கள் அவை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வெளியிடப்படுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக்களில் தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட்டு பின்னோக்கி சீர் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு புறம்பே கடந்த ஆண்டின் சீராக்கலாக ரூபா 21,448,929 ஆன மீதியொன்று 2024 சனவரி 01 ஆந் திகதி முன் கொண்டுவரப்பட்ட அதிகரிப்பொன்றிற்கு மற்றும் மீளாய்வாண்டின் அதற்கு தொடர்புடைய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.	பொருண்மையான முன்னைய காலப்பகுதிக்கான வழுக்கள் 27, 28, 33, 48, மற்றும் 54 பந்திகள் பிரகாரம் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும்.	-மேற்படி-

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய கண் வங்கியின் செலவொன்றான ரூபா 111,109 தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு நிதியத்தின் செலவொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் ஆண்டின் அதிகரிப்பு அப் பெறுமதியில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீர் செய்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தவறினை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை தேசிய வைத்தியசாலையின் சம்பள பிரிவு விரிவாக்கப்பட்டு பழுதுபார்க்கப்பட்டமைக்கு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,801,600 தொகையான இறுதி உறுதிச்சீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவொன்று குறித்த நிதியத்தின் செலவீனமொன்றாக காண்பிக்கப்படாது முற்பணமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் ஆண்டின் அதிகரிப்பு மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமதியினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீர் செய்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி-
(இ)	மீளாய்வாண்டினுள் வர்க் த வேர்ல்ட் (Work The World) நிறுவனத்தின் ஊடாக வெளிநாட்டு மாணவர்கள் பயிற்சியளிபதற்காக நிதியத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 221,160 ஆன தொகை நிதியத்திற்கு வரவு வைக்கப்படாது கார்டியலொஜீ பன்ட் எல்ஆர்எச் லிட்டல் ஹார்ட் (Cardiology Fund LRHLittle Heart)இற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	-மேற்படி-	-மேற்படி-

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2012 மே 04 ஆந் திகதிய அமப/12/0489/509/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வட மாகாணத்தின் புற்று நோயாளிகளுக்கான கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக (Trail Project) சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனமாகிய நம்பிக்கை பொறுப்பு கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்த கருத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பலை ஆதார வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சை அலகு நிர்மாணித்தல் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சை அலகுக்காக மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. தெல்லிப்பலை வைத்தியசாலையை நிர்மாணிக்க மேற்குறித்த நம்பிக்கை பொறுப்பு கம்பனிரூபா 218.6 மில்லியன்தொகையை உதவியாக வழங்கியிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் Jaffna Project பெயரில் குறித்த நம்பிக்கை பொறுப்பு கம்பனியால் சேகரிக்கும் உதவித் தொகை சுகாதார அமைச்சின் சொத்து ஒன்றாக காணப்படுவதால் 2024 மார்ச் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 75,961,398ஆன தொகை உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்பாண போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் அலகை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தாது அந்த கம்பனியின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	பணம் பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபதியின் ஆலோசனை பிரகாரம் சட்ட பிரிவு ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	விரைவாக அறவிடப்பட்டு நோக்கத்துடனான பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	வெள்ளப்பெருக்கு அனர்த்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் யூன் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் கொழும்பு மற்றும் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முறையே ரூபா 1,100,000 மற்றும் ரூபா 300,000 ஆன முற்பணம் மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	முற்பணம் 2025 மே 28 மற்றும் 2025 மார்ச் 19 ஆம் திகதி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.	பெற்றுக் கொடுக்கப்படுகின்ற முற்பணம் பணிகள் நிறைவு செய்யப்பட்டவுடனே தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் xii அதிகாரத்தின் 5 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகள் மற்றும் 2022 திசெம்பர் 21 திகதிய PED 8/2022ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	உத்தியோகத்தர்களின் விடுமுறை தொடர்பாக தாபன விதிக் கோவை நடைமுறையில் காணப்படுமென நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக மீதப்படுத்தப்பட்ட விடுமுறைகளுக்கான கொடுப்பனவாக ரூபா 125,885 செலுத்தப்பட்டிருந்தது.	தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்குPED 08/2022 பிரகாரம் ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவாக மீதப்படுத்தப்பட்ட வைத்திய விடுமுறை மற்றும் வருடாந்த விடுமுறைக்காக கொடுப்பனவு செய்வதற்கு மேற்படி சுற்றறிக்கை பயன்படுத்துவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது	தாபன விதிக் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அதிகாரத்தின் 3:17:1 ஆம் பிரிவு	பிரதான கடனாளியின் கட்டுப்பாட்டின் கீழ் பணிப்புரிகின்ற எவரேனுமோர் உத்தியோகத்தர் அக்குறிப்பிட்ட கடனாளியின் பிணையாளராக அங்கீகரிக்கப்பட முடியாதபோதிலும், நிதியத்தின் கணக்காளர் அல்லது பதிவாளரின் கீழ் பணிபுரியும் கணக்கீட்டு உத்தியோகத்தர், பிணையாளராக கையொப்பமிட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 104,640 ஆன இடர்கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.	தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர்கள் அரச உத்தியோக்கத்தராக எடுக்கப்படாமை மற்றும் நிதியத்தின் தலைவரான சுகாதார செயலாளரினால் கணக்காளர்/பதிவாளாருக்கு இடர்கடன் அங்கீகரித்துள்ளது.	-மேற்படி-
(இ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15 ஆம் பந்தியின் நிதி பிரமாணம் 877			

(i)	2 (ஈ) பந்தி	கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் ஒவ்வொரு நிதியும் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச கணக்குகள் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொறுப்பு சபைக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரச கணக்குகள் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	2 (உ) ஆம் பந்தி	வருடாந்த செயலாற்றல் அறிக்கை மூன்று மொழிகளில் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் உரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	-மேற்படி-

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 248.74 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 371.30 மில்லியன் தொகையாக இருந்தது. அதன் பிரகாரம்நிதி விளைவுகளில் ரூபா 122.56 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிதியத்தின் கீழ் காணப்பட்ட இலங்கை கண் வங்கி தனி நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டமையின் காரணத்தினால் அவ் வருமானம் இழக்கப்பட்டமை மற்றும் நிதியத்திற்கு கிடைக்கப்படுகின்ற உதவிகள் ஒப்பிட்டளவில் குறைந்தமை பிரதானமான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு பத்து மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்கான Little Heart கருத்திட்டத்தின் கீழ் திரட்டிய பொது மக்கள் நிதியங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 707,570,869 ஆன போதிலும், மீளாய்வாண்டினுள் அந் நிதியிலிருந்து எந்தவொரு தொகையும் செலவிடப்பட்டிராததுடன் பெறுகை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு, நிதியம் மற்றும் சிறுவர் நோய் நிபுணத்துவ கல்லூரி (College of Pediatricians)கையொப்பமிடப்பட்டுள் ள உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது.	அன்பளிப்புத் தொகையை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை அறுவை சிகிச்சை கட்டித்தொகுதியை மேம்படுத்த அன்பளிப்பாளர் ஒருவரினால் 2020 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 42,035,398 தொகை மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவையான நுகர்புப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 22,725,000 ஆன அன்பளிப்பு தொகையை குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிகிச்கை கட்டிடத் தொகுதி மேம்படுத்துவதற்கு மற்றும் அதற்காக இந்த தொகை போதுமானதாக இல்லாமையினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபேக்ஷா வைத்தியசாலைக்கான அன்பளிப்பு கணக்கில் ரூபா 461,332,361 ஆன மீதியொன்று காணப்படதுடன் அதனுள் வைத்தியசாலையின் சிறுவர் வார்ட் நிர்மாணித்தல் மற்றும் Thermo Therapyஇயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக முறையே 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கூட்டுததொகை ரூபா 153,540,440 தொகையான பொதுமக்கள் அன்பளிப்பு குறிக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில் அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் நோயாளர் சிகிச்சை சேவையை தொடர்ந்து பேணிச் செல்ல Thermo Therapy இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-

	திரட்டிய அன்பளிப்புத் தொகையை மற்றும் Pet Scan இயந்திரமொன்றை கொள்வனவு செய்த பின்னர் எஞ்சிய தொகையை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 202,309,478 தொகையான CT Simulator இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல், அந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான கட்டிடத்தை நிர்மாணிக்க மற்றும் Sonial Vision x – ray இயந்திரத்தை நிறுவவுள்ள கட்டிடத்திற்காக மின்சார வழங்கலை பெற்றுக் கொள்ளல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஈ)	அபேக்ஷா வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணமொன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,000,000 ஆன தொகையொன்று அன்பளிப்பாளரொருவரிடமிருந்து பொது நிதியத்திற்கு பெறப்பட்டிருந்ததுடன் அத்தொகை பயன்படுத்தப்பட்டு Pet CT Scanபரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான GE 68 Calibration Phantom இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அத் தொகை பயன்படுத்தப்பட்டு தேவை நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த தொகை CT simulator இற்காக பயன்படுத்தப்படும்.	-மேற்படி-
(உ)	1998 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்கு 03 வெவ்வேறு கருத்திட்டங்களுக்குரியதாக பெறப்பட்டிருந்த ரூபா 13,159,775 ஆன அன்பளிப்பு குறிக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அன்பளிப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 மற்றும் 2021 கொவிட் தொற்று காலப்பகுதியில் வெவ்வேறு தேவைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிதியில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 22,770,554 ஆன மீதி மீளாய்வாண்டு வரை வேறு பயனுறுதிமிக்க நோக்கமொன்றிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அன்பளிப்பு கணக்கில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நிதியத்தின் ரூபா 5,642,874 ஆன தொகை தங்கல்லை ஆதார வைத்தியசாலையின் மலசலக் கூடங்களின் கதவுகள் மற்றும் ஏனைய பழுதுபார்த்தல்களுக்கு பயன்படுத்தப்படும், தெலசீமியா நோயாளர்களுக்கான நிதியத்தின்ரூபா 173,238, பிரதி பணிப்பாளர் நாயகத்தினால் (தொற்று நோய்) தேவைப்படும் நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு வைத்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும், வெளிநாட்டு அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்படடிருந்த ரூபா 7,343,663 ஆன தொகை மருந்துகள் மற்றும் வைத்திய வழங்கலுக்காக என்பதனால் அதற்காக வைத்துக் கொள்ளுமாறு பொறுப்பு சபையினால் தீரமானிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(ஊ)	2024-2029 காலப்பகுதிக்குரிய திட்டிணைவுத் திட்டம் தயாரிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் முற்பணமாக	பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு மூன்று	கூட்டிணைவுத் திட்டம் விரைவாக தயாரிக்கப்படுவத

செலுத்தப்பட்ட ரூபா 343,333 மற்றும் பணிப்பாளர் சபை கூட்டமொன்று மற்றும் பயிற்சியொன்றிற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 353,500 உள்ளடங்கலாக ரூபா 696,833 ஆன தொகை ஏற்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் கூட்டிணைவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிக்கவில்லை.	மொழிகளிலும் அச்சிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை தேசிய வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக பெறப்பட்டிருந்த ரூபா 6,571,856 ஆன அன்பளிப்பு தொகை செலவு செய்யப்பட்டு வைத்தியசாலையின் பிரதான நபர்களின் கட்டுப்பாடு பிரிவு விரிவாக்கப்பட்டு பழுதுபாரத்தல், சம்பள பிரிவு - 1 விரிவாக்கப்பட்டு பழுதுபார்ப்பதற்கும் எஞ்சிய தொகையில் கடன் பிரிவின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரைிலும் அவ் அன்பளிப்பு தொகையில் நபர்கள் கட்டுப்பாட்டு பிரிவின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,242,912 ஆன செலவீனம் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	புழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டு, இலங்கை தேசிய வைத்தியசாலையினால் உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளது	அன்பளிபாக பெறப்பட்ட தொகை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.3 நிதிய குறைப் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்தவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியத்தை பயன்படுத்துதல் பலவீன நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 திகதியளவில் பொது நிதியத்தின் திரண்ட வருமானம் ரூபா 712,414,580 தொகையானதுடன் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டினுள் பொது நிதியங்களிலிருந்து செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 90,326,859 ஆன தொகை மாத்திரமே ஆகும். அதன் பிரகாரம் நிதியத்தின் பணப் பயன்பாடு 13 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	பொது முயற்சிகள் திணைக்களத்தின் 12/2003 பிரகாரம் தொலைநோக்கு,குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் உள்ளடக்கப்பட்ட மூலோபாய நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2.2.1 பந்தியின் பிரகாரம் தொடர்ந்தியங்கும் நிலையை உறுதி செய்யப்பட்டு நிதியத்தின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.	உரிய நிறுவனங்களுக்கு அறிவூட்டப்பட்டு நிதியை திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும்.